தமிழகச் சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, மார்ச் 23, 1967.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு:—ஒரு உரையில் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) கோவைப் பஞ்சாலைகளில் ஆள் குறைப்பு.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : முதல் அலுவல், கேள்விகள்—பதில்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்குக் கேள்விகள் இல்லை. ஆகவே அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள். என்னிடம் மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எ. கே. சுப்பையா அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானம்.

"கோவையில் பஞ்சாலைகளில் நிகழ்ந்து வரும் ஆள்குறைப்பு, வேலையின்மை, சம்பளக் குறைப்பு போன்ற முதலாளிகளின் நடவடிக்கைகளால் ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பீளமேடு ஸ்ரீரெங்கவிலாஸ் மில்லில் 1—1—1967 முதல் வேலை செய்த நாட்களுக்கு சம்பளம் கொடுக்கத் தவறியதுமன்றி 1—4—1967 முதற்கொண்டு ஆள்குறைப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளனர். இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் அரசினர் தலையிட்டு தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக, இந்த ஒத்தி வைப்பு பிரேரணைக்கு அனுமதி கோருகிறேன்."

என்று அவர் கடிதம் எழுதியுள்ளார்.

இந்தத் தீர்மானம் அரசினரின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டது என்று இந்தத் தீர்மானத்தின் சொற்களே காட்டு கின்றன. இரண்டாவதாக, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்ற தொழில் விவகாரச் சட்டம் இருக்கிறது. தொழில் விவகாரச் சட்டப்படி தீர்க்கக் கூடிய பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானப் படி கொண்டுவரக் கூடாது என்பது நம் விதிகளில் காணப்படு கிறது. இந்தக் காரணத்தினாலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு பேரவைத்தலைவர் அனுமதி கொடுக்கவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.